10. 06. 1998 அன்று களமுனைக்கு மேலாகக் கடந்து பறந்து இரண்டு கிபிர்கள் போட்ட குண்டுகள் எங்கோ தூரத்தில் கேட்டன. அந்தச் சத்தத்துடன் 'அம்மா'வின் உயிரும் அடங்கி விட்டது ஆயினும் அவன் உருவாக்கி விட்ட வழங்கல் மார்க்கங்களூடாக நேரம் தவறாமல் உணவு வந்து சேர்ந்தது. கண்களில் நீர் பெருக அன்றைய உணவை உட்கொண்டோம்.

— வே. தீபன்

அந்திவானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு

# அம்மா...



## லெப்-கேணல் அன்பு

# அம்மா

லெப். கேணல் அன்பு / அம்மா

**24-7-98**

# அம்மா



## லெப். கேணல் அன்பு / அம்மா

### வைத்திலிங்கம் திருக்கேதீஸ்வரன்

தோற்றம்
**03-09-1965**

வீரச்சாவு
**10.06-1998**

கட்டளைப் பணியகம்
மாங்குளம்
14.07.1998

''இராணுவம் தனது கால்களால் நடப்பதில்லை. அது தனது வயிற்றினாலேயே நடக்கிறது'' எனக் கூறினார் நெப்போலியன், ''போரிடும் பிரிவுகளுக்கான வழங்கல்'' என்பதை எடுத்து நோக்கும்போது மிகப் பிரதான பங்கு வகிப்பது உணவேயாகும், உணவு வழங்கலில் ஏற்படும் பிரச்சினைகள் போர்வீரர்களின் உடல் நிலையில் மட்டுமன்று, மனோ நிலையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

குறிப்பாக நீண்டு செல்லும் பாதுகாப்பு சமர்களில் இப்பணி மிகவும் சிக்கலான ஒன்றாகும். ஒரு வருடத்தையும் தாண்டிவிட்ட இன்றைய வன்னிச் சமர்க்களத்தில் பல சிக்கல்களை, சிரமங்களை எதிர் நோக்கியபோதும் இப்பணியைத் திறம்படச் செய்தவர் எமது அனைவரினதும் அன்புக்குரிய லெப்டினன்ட் கேணல் அன்பு (அம்மா) அவர்கள்

சிறந்த நிர்வாகத்திறனும்' போதிய போர்க்களப் பட்டறிவும், கடமை நிறைவேற்றம் என்பதுடன் நின்றுவிடாமல் உணர்வுடன் உழைக்கும் உளப்பாங்கும் அம்மாவைப் போன்ற ஒரு சிலருக்கே அமைந்திருக்கும்.

சமர் முனைக்கு வந்து போராளிகளுடன் உரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் அவற்றைத் தீர்த்து வைத்த ஒரு உன்னத தளபதியை இன்று வன்னிச் சமர்க்களம் இழந்து நிற்கிறது.

சமர்க்களப் போராளிகள் அனைவரின் மனங்களிலும் அழியாத இடத்தைப் பெற்றுவிட்ட லெப்டினன்ட் கேணல் அன்பு (அம்மா) விற்கு எம் அனைவரின் சார்பிலும் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வி கருணா
விசேட தளபதி
மட்/அம்பாறை

# மனதில் வாழும் 'அம்மா'வின் கதை

அன்பு என்றும் என் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவனாகவே இருந்தான்.

நான் 1987ம் ஆண்டு காலப்பகுதியில் நாவற்குழி இராணுவ முகாமில் இருந்த இராணுவம் தென்மராட்சிப் பகுதிக்கு வெளியேறாது தடுந்தும் நிறுத்தும் பணியை பொறுப்பேற்ற போது அன்பு 7 பேர் கொண்ட அணி ஒன்றுக்கு பொறுப்பாக இருந்து செயற்பட்டுக் கொண்டிருந்தவன் அப்போது இவனின் ஆர்வத்தையும் செயற்திறனையும் கண்டு 15 பேர் கொண்ட அணி ஒன்றுக்கு பொறுப்பாக அந்தமுகாமைச் சுற்றியுள்ள ஒரு பகுதிக்கு நியமிக்கப்பட்டான்

இவனிடத்தில் சில தனித்துவமான இயல்புகளை அப்போது நான் கண்டேன். தனக்கு இடப்படும் எப்பணியையும் தானே நேரேநின்று மிகவேகமாக இரவு பகல் பாராது செய்து முடிக்கும் ஆற்றல் இவனிடம் இருந்தது. நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து இராணுவம் வெளியேற முயற்சிக்கும் போதெல்லாம் இவனின் செயற்படும் திறன் பெருமை கொள்ளக் கூடியவாறு இருந்தது.

1987ம் ஆண்டு இந்திய இராணுவ வருகைக்குப பிற்பாடுதான் இப்பணியை விட்டு வேறுஒரு பணிக்கு மாற்றம செய்யப்பட்டிருந்த வேளை, அன்பு தென்மராட்சிப் பகுதியில் நின்று செயற்பட்டு வந்தான். இந்திய இராணுவத்தை எதிர்த்து நாம் தென்மராட்சிப் பகுதியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த போது. அன்பு தென்மரார்ட்சிப் பகுதியில் நின்று பல தாக்குதல்களை சிறப்பர்க நடத்தி முடித்ததை அப்போது தென்மரார்ட்சிப் பெர்றுப்பாளர்களாக இருந்தவர்கள் மூலம் அறிந்து கொர்ண்டேன். அந்தக் கர்லப்பகுதியில் போராளிகள் பல அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து அங்கு உறுதியுடன் நின்று இந்திய இராணுவத்தை எதிர்த்து நின்று சண்டைகளைச் செய்தார்கள்.



தமிழீழம் ஒன்று அமைவதை விரும்பாத இந்திய அரசு பல சமூகவிரோத கும்பல்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி எம்மை அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. எமது போராளிகள் இருக்கும் இடங்கள் இவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டன. அந்த நேரங்களில் எமது போராளிகள் உண்ணும் உணவு தங்குமிட வசதிகள் என்பவற்றில் பல சிக்கல்களை எதிர் கொண்டார்கள். அந்தநேரங்களில் எல்லாம் கிடைக்கும் உணவை அங்கு இருக்கும் போராளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப சரியாக பங்கிட்டுக் கொடுத்து எல்லோரையும் சந்தோசப்படுத்தி, ஒரு தாயின் ஸ்தானத்தில் இருந்து செயற்பட்டமையினால் சக போராளிகள் எல்லாம் இவனை 'அம்மா' எனவும் இளைய போராளிகள் மதிப்புடன் 'அம்மா அண்ணன்' எனவும் அழைத்து வந்தார்கள்.

1989ம் ஆண்டு யாழ்ப்பாணம் நோக்கி நாம் படையணியாக சென்றபோது. அம்மாவை தென்மராட்சிப் பகுதியில் இருந்து வலிகாமப்பகுதிக்கு என்னுடன் அழைத்துச் சென்றேன் அங்கு இந்திய இராணுவத்தின் கைக்கூலிகள் போல் செயற்பட்டுவந்த தேசவிரோத கும்பல்களுடனும், இந்திய இராணுவத்துடனும் நடந்த சண்டைகளில் மிகத் திறமையாக செயற்பட்டு களமுனைகளில் பொறுப்பாக நின்று செயற்படக் கூடிய ஒரு களமுனைத் தளபதிபாக இருந்தான்.

அப்போது நான் யாழ்மாவட்ட பொறுப்பாளராக இருந்து நிர்வாகரீதியாக சில ஒழுங்குகளை செய்து கொண்டிருந்த வேளை எமக்கு இருந்த உடனடிப் பிரச்சனைகள் சிலவற்றை உடனடியாக நிறைவேற்றுவதற்கு தானாகவே செயற்படக் கூடிய பொறுப்புமிக்க பொறுப்பாளர்களை உடன் அமர்த்த வேண்டியிருந்தது அந்த வேளையில் எமது சகல அணிகளுக்குமான உணவு வழங்கல் பொறுப்பை எனது அன்புக்குரிய அம்மாவை அழைத்து கதைத்து பொறுப்புக் கொடுத்தபோது மிகவும் பொறுப்புடன் அப்பணியை செய்து வந்தான். சில சமயங்களில் நானே ஆச்சரியப்பட்டும் இருக்கிறேன் '' இவனால் எப்படி இவ்வளவு விரைவாக செய்யமுடிகின்றது' என்று தனக்கு கொடுக்கப்படும் பணி எதுவாக இருந்தாலும் அதை அப்பொழுதே கவனமாகவும் நேர்மையாகவும் திட்டமிட்டு செயற்படுத்தும் ஆற்றலை இவன் தன்னகத்தே கொண்டிருந்தான்.

2ம் கட்ட ஈழப்போர் தொடங்கிய போது உணவு வழங்கல்கள், சமையற்கூடங்கள் என்பன விரிவுபடுத்தப்பட வேண்டி இருந்தது. அந்த நேரத்தில் களமுனைகளில் நிற்கும் போராளிகளுக்கு உணவு கொடுப்பது என்பது உண்மையிலேயே கடினமானதும் சிரமம் நிறைந்த ஒரு பணியும் ஆகும். களமுனைகளுக்கு அந்தந்த நேரங்களிற்கு உணவுகள் போய்ச்சேரவேண்டும். சிலசமயங்களில் அம்மாவை நான் சந்திக்கச் சென்ற போது அம்மா ஒரு சமையற்காரனைப் போல் சமையல்கூடத்தில் நின்று செயற்பட்டதை கண்டிருக்கிறேன், கள்த்தில் நிற்கும் போராளிகளுக்கு உரிய நேரத்தில் உணவு போய்ச்சேர வேண்டும் என்ற ஒரு பாச உணர்வு அவனிடம் ஊற்றெடுப்பதை உணர்வேன்.

அம்மா ஒருநாள் என்னிடம் வந்து ''அண்ணை என்னை சண்டைக்கு எடுக்கமாட்டியள் போல கிடக்கு'' என்று கூற நான் சொன்னேன்: உன்னைப்போன்று ஒரு ஆள் அங்கு உணவு வழங்கல் ஒன்றிலும் பிரச்சனைகள் தோன்றாதவாறு நிர்வாகத்தை கவனிக்கும் அளவுக்கு இருந்தால் நீ வரலாம்'' என்று அப்போது அவன் ''அதற்கு ஒரு ஆளை நான் உருவாக்கி விட்டேன், எந்தப் பிரச்சனையும் இல்லாமல் அது நடக்கும்'' லன்றான்.

அது சண்டைகள் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். அப்போது அம்மா தாக்குதல் அணி ஒன்றைப் பொறுப்பேற்று பலாலியில் நின்று சண்டையில் ஈடுபட்டான். அதில் எதிரியின் குண்டுபட்டு காலில் காயமடைந்தான். காயம் மாறிய பின்பு அவன் பல பின்தள நிர்வாக வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டான். ஆயுத வெடிபொருள் விநியோகம் எமது போராளிகளுக்கான இராணுவ அணிகலன்களை தயாரித்தல் போன்ற பணிகளை மிகத்திறமையாக நிர்வகித்து வந்தான்.

என்னுடன் இருந்த காலத்தில் அம்மா என்னுடன் நின்று மிகுந்த நேர்மையுடனும் பொறுப்புணர்வுடனும் தனது கடமைகளை கவனித்து வந்தான். இவனின் திறமைகள் கண்டு பின்பு இவனுக்கு பல பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டன. கடைசியாக நிதித்துறை வழங்கற்பகுதி பொறுப்பாளனாக பொறுப்பேற்று தனது கடமைகளை மிகுந்த நேர்மையுடன் ஆற்றிவந்தான். எம்மால் திடடமிடப்பட்டு மேற்கொள்ளப்



பட்ட வெற்றிச் சமர்களிலும் தற்போதைய சமர்கள் எல்லாவற்றிலும் அம்மாவிற்கு பெரும்பங்கு உண்டு.

வழங்கல் பகுதி பொறுப்பாளர் என்பதை பெயரளவில் அம்மா கொண்டிருக்கவில்லை அவன் தனது இயலாத காலுடன் சகல களமுனைகளுக்கும் சென்று அங்கு போராளிகளின் ஒவ்வொரு பிரச்சனைகளையும் நேரடியாக கண்காணிப்பவனும் கூட. அம்மா என்கின்ற அந்த பாச உணர்வுகலந்த அந்தச் சொல்லை எமது போராளிகள் அழைக்கும்போது , உண்மையிலேயே எமது போராளிகளின் தாயைப் போல் இருந்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வான்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்த மண்ணுக்காக பல ஆயிரக்கணக்கான உயிர்கள் தியாகம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு போராளிகளும் இந்த மண்மீட்புக்கான போரில் தம்மை இணைத்துக் கொள்ளும் போது எமது தேசியத்தலைவரின் வழிகாட்டலில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் பணியை திறமையாக செய்து முடிப்பதற்கு அவர்கள் அயராது உழைப்பார்கள்.

'அம்மா' அவர்களின் துயரச் செய்தி எம்மை எல்லாம் அதிரவைத்தது; ஒருகணம் எம்மை மௌனம் கொள்ள வைத்தது; எம்மை சுதாகரித்து கொள்ள முடியவில்லை. இந்தப் புனிதன் எம்மை விட்டுச் சென்ற நாளில் இருந்து இன்று வரைக்கும் ஒவ்வொருநாளும் ஏதாவது ஒரு கதையில் பெருமைப்பட்டு சொல்லக்கூடிய உதாரண புருசனாக இன்று அவன் உயர்ந்து விளங்குகின்றான். அந்த அளவுக்கு அவன் இந்த விடுதலைப் போராட்டப்பணி பலவற்றில் தன்னை பங்கு கொள்ளச் செய்து விடுதலைப் போராட்டத்தை மிளிரச் செய்தவன். இவன் என்றும் எம் மனதை விட்டகலாதவனாக மாறி விட்டான்.

நன்றி.

**சி. சோ. பானு**
பொறுப்பாளர்
கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

# புலி அம்மா

தமிழீழம்
14. 07. 1998

'அம்மா'

பணிக்கு ஏற்றவாறு அமைந்து விட்ட பொருத்தமான பெயர். காலநேரம் தவறாமல் தமது பிள்ளைகளுக்கு உணவூட்டுவதில் பொறுப்புணர்ச்சி காட்டும் அம்மாக்களைப்போல 'அம்மா' – 'புலி அம்மா' தான்.

சமர் புரிதலுக்கு மிக அவசியம் உணவு. களமுனைக்கு உணவு செல்வது ஒழுங்கில்லாதுவிடின் போராளிகள் வைத்திருக்கும் துப்பாக்கிளே அவர்களுக்கு ஊன்றுகோல்களாகி விடும் என தலைவர் அடிக்கடி நினைவூட்டுவார்.

மூன்று வேளையும், ஒழுங்காக உணவை – தேவையான பொருட்களைக் கொண்டு செல்லக் கூடிய அமைதியான வேலைத்தளம் போல களமுனை இருக்காது.



சண்டைகள் நடவாத நாட்களிலேயே காற்றில் ரவைகள் திரியும் களத்தில் எறிகணைகள் துள்ளும். சண்டைகள் வெடிக்கும் நாட்களில் முன்னரங்கத்திற்கு உணவுப் பொதிகளைச் சுமந்து செல்வதே ஒரு சமர்தான்.

புலிவீரர்களின் துப்பாக்கிகளை இயக்கும் உயிர்ச்சத்தை கைகளில் தாங்கியவாறு குண்டுச் சிதறல்களை – ரவைத்துண்டுகளை சமாளித்தபடி வழங்கல்பணி நடைபெற வேண்டும்.

வழங்கல் சமரின் வெற்றியில்தான் உண்மையான சமரின் தலைவிதி தங்கியுள்ளது அந்தளவுக்கு வழங்கற்பணி மிகமிக முக்கியம்.

அம்மா என்ற தாயை சரியாக இனங்கண்டெடுத்த தலைவர் அவர்கள், வழங்கல்பணிக்கு ஒருதன்னிகரில்லாத தளபதியைத் தந்திருந்தார்.

ஜயசிக்குறுவுக்கு எதிரான எதிர்ச்சமரில் நாம் பெற்றுவரும் வெற்றிகளுக்குப் பின்பலமாக அம்மாவின் கடின உழைப்பும் அதில் அவன் காட்டிய ஆர்வமும் உள்ளன.

எரிபொருள் நெருக்கடி – பொருளாதார நெருக்கடி – வாகன நெருக்கடி என நெருக்கடிப்பேய் வழங்கல் வேலைகளுக்கு மிரட்டலாக எழுந்துள்ள இன்றைய காலகட்டத்திலும் – தனது சாதுரியத்தாலும் புதிய வழிகளைக் கண்டறிந்து பயன்படுத்தியும் நெருக்கடிப்பேய்க்கு மூக்கணாங் கயிறு போட்ட ஒரு சாதனையாளன்.

**10. 06. 1998** அன்று களமுனைக்கு மேலாகக் கடந்து பறந்து இரண்டு கிபிர்கள் போட்ட குண்டுகள் எங்கோ தூரத்தில் கேட்டன. அந்தச் சத்தத்துடன் 'அம்மா' வின் உயிரும் அடங்கி விட்டது. ஆயினும் அவன் உருவாக்கிவிட்ட வழங்கல் மார்க்கங்களூடாக நேரம் தவறாமல் உணவு வந்து சேர்ந்தது. கண்களில் நீர் பெருக அன்றைய உணவை உட்கொண்டோம்.

**வே. தீபன்**
தளபதி

# அறியாத தடத்தில் பதிவாகிப்போன காவியமே

விடியலுக்கு விதையாகி விட்ட வீரனே
தாயக விழுமியங்களுக்காக சிறகடித்த வேங்கையே
சுகங்களை விட்டு சுமைதாங்கிய தோழனே.... உன்
இறுக்கமும் நெருக்கமும் எமது தேசத்தின்;
பணிகளின் வசந்தத்தை உணர்த்தின.

பூவின் வாசம் வண்டிற்கு சுகந்தம்.... 'அன்பு'
உன் பணி ஈழ உறவுகளின் சொந்தம்.
தலைவனின் பாதையில் தளராது நடைபோட்ட
தோழனே!
இமயம் இடிந்து போகலாம்
இதயம் வளைந்து போகலாம்; ஆனால்
உன் கட்டுப்பாடு மட்டும் தொட்டுப் பேசும் வேதம்.

பயணங்கள் மாறினாலும் பாதைகள் மாறாது
நடைபயின்ற அம்மா!
சும்மாநிற்காது துடிப்புடன் பணியில் பவனிவந்த
உன் பாத ஓசைகள் காலம் எல்லாம்
ஈழத்தவர் காதில் சலிக்காது ஒலிக்கும்,
எம்மை விட்டுப் போனாலும்
இதயங்களுடன் சங்கமமாகும் உன்
நினைவுகள் என்றும்
நெஞ்சினில் நிலைத்திருக்கும்.
இன்று நீ காவியம்
எம் உள்ளத்தில் ஓவியம்.

போ. சொர்ணம்
தளபதி



# 'அம்மா' என்ற அற்புதம்

1993 மார்கழிக்கு முன்னர் - இனவாதக்கறைபடிந்த எம்மண்ணை மீட்கின்ற இலட்சியப் பணியிலே போராளிகள் இருவராக - தமிழினத்தின் தலைவனிடும் பணி முடிக்கும் பொறுப்பளார்கள் இருவராக நாம் பழகியதால் இறுக்கமான நட்பு இருவரிலும் அரும்பு விட வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் மாறுகின்ற போராட்டப்பாதையில் மாறிவந்த பணி, எம்மை மாறாத அன்புள்ள நண்பர்களாய் இணைத்திருந்தது. தரப்பட்ட பணிகளை ஆழமான புரிந்துணர்வுடன் கூடி ஆலோசித்தே நான்கரை ஆண்டாக செய்து வந்ததால் இணைந்திருந்த நட்பின் பிணைப்பு பிரிக்க முடியாமல் இறுக்கமாகியது. மண்ணில் பிறந்திட்ட மானிடர் யாவரும் போற்றி மனதினில் புகழ்கின்ற தாயினுக்கடுத்தது ''உற்ற நல்ல நண்பன்'' என்பதை உன் இழப்பு எனக்கு உணர்த்திவிட்டது. வல்லதலைவனால் வழங்கப்பட்ட பணி உன்னை உன்னத விடுதலைவேள்வியில் நிற்கின்ற வீரர்களின் அம்மாவாகவே மாற்றியது. தருகின்ற பணியாகவே மாறிவிடுகின்ற நீ, பணிமுடிக்கும்போது நட்புக்கும் வளையாத நண்பனாய் வாழ்ந்ததே அனைவரையும் கவர்ந்தது துன்பங்களும் துயரங்களும் தனிமனிதனுக்கேயுரியவை. இன விடுதலைக்கான போராட்டவாழ்வில் இவை ஒன்றும் பெரிதல்ல என்று நீ அடிக்கடி சொல்வதை எண்ணிப்பார்க்கிறேன். ''கஞ்சி குடித்தாவது போராளிகள் சண்டை செய்வார்கள்'' என்று அண்ணை கூறியதாகக்கூறி, நலிவடையும் நிதிநிலையில் சரியாக வேலை செய்து ''நாம் போராளிகளிற்கு நல்ல உணவு வழங்கவேண்டும்'' என்று கூறும்போது, பெற்றெடுத்த குழந்

ைதயின் பட்டினியைப்பொறுக்காத பாசத்தாயின் அரவணைப்பு
உணர்வு உன்னிடமிருந்ததைப் புரிந்து கொண்டேன்.

கடமைக்கும், நட்புக்கு இலக்கணம் வகுத்த உந்தன் கடைசி
நிமிடங்களை எண்ணும்போது என்னால் எதையுமே எழுதமுடி
யாமல் இருக்கின்றது. அந்தக்கடைசி நிமிடத்தையாவதுசெதுக்கி
விட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். தளர்ந்த பேனாவைச்
சரிசெய்து நண்பனுக்காக ஒருவரி எழுத முயலுகிறேன்; இரு
வரிடையேயும் வளர்ந்த ஆழமான நட்பால், காணமல், கதைக்
காமல் இரண்டு நாளிற்குமேல் இருக்க இருவராலும் முடியா
மற்போனது. ஆனால் விடிந்து கொண்டிருந்த அந்த 10.06.98
அன்று மட்டும் ஐந்து நாட்களின் பின்னான சந்திப்பு.

காலை ஆறுமணிக்கு குளிப்பதற்காக கிணற்றடிக்குச்
சென்றோம். குளிக்கும்போது நீண்டநாள் இடைவெளியின் பின்
னர் சந்திப்பவர்கள் போன்ற உணர்வில் ஏதோவெல்லாம்
கதைத்தோம். அன்றுமட்டும் ஏன் அத்தனை மகிழ்ச்சி எம்மில்
குடிகொண்டது. அன்றுதான் நாமிருவரும் சந்திக்கும் இறுதி
நாள் என்பதை நான் அப்போது எண்ணியிருக்கவில்லை

குளித்து விட்டுத் தேநீர் குடித்தோம்; நாளேடு படித்தோம்;
பல விடயங்கள் கதைத்தோம். பின் அம்மாவின் திருமணவிட
யம் தொடர்பாக சற்று ஆழமாகக் கதைத்துவிட்டுக் காலை
உணவுண்டோம். அந்தக் காலை உணவுதான் எமது நட்பின்
இறுதி உணவு என்பதை யார் எண்ணினோம். காலை களியுண்ட
களிப்பிலிருந்த எல்லோரையும் விட்டுவிட்டு அம்மாவை மட்டும்
காலன் அழைத்ததில் என்ன நியாயம்?

மறக்கவும் முடியாமல் நினைக்கவும் முடியாமல் தவிக்கின்ற
அந்த இரண்டு நிமிட இடைவெளியில் நடந்த கோரச்சம்ப
வத்தை எப்படி நான் எழுதுவேன்
அன்புவை – அம்மாவை – நட்பை எழுதுவதற்கு எந்தப்
பேனா முனைக்குமே வலுவில்லை.
துன்பங்களை ஆளவிட்டால் துயரம் குறையாது.
செத்துக் கொண்டிருக்கின்ற தமிழனின் வாழ்வைச் செப்பனிட
எத்தனை பெறுமதிமிக்க உள்ளங்களை இழந்தோம்.
எம் இனத்தின் இனிமைகளின் ஆணிவேரையே பிடுங்கி எறிந்த
இனவெறியர்களின் கொட்டமடக்க
கடந்தகால இனிமைகளை எண்ணி



கண்ணீர் விடுவது முறையல்ல.
எம் போராளிகளின் நட்பு மிக ஆழமானது.
அதனால் தான்
வீழ்ந்தவர்களின் இலட்சியக்கனவை நனவாக்க
இன்றும் வீழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
எம் இனிய உறவுகளே!
உங்கள் இதயப்பாறைகளில் இருந்து
ஊற்றெடுக்கும் நீருக்கு
கண்களைக் கால்வாயாக்காதீர்கள்!
எதிரியின் இழிசெயலைக்கண்ட
கண்களில் இருந்து எழுகின்ற
செந்தீப் பொறிகளில்
தமிழன் உணர்வுள்ளவன் என்பதை உணர்த்துங்கள்!
தலைவனின் காலமே
தமிழனின் விடியற்காலமென உறுதியெடுங்கள்!
நட்புக்களும் பாசங்களும் உள்ளேயிருக்க
வெளியில் வெடிமருந்துக் கவசமிடுங்கள்!
வாழ்வதற்காகப் போராட
போர்க்கருவியெடுங்கள்!
இழந்த வசந்தங்கள்
மீண்டும் எம்மை நோக்கிவர
எதிரிமீது படையெடுத்து,
பகைவென்று, புலிக்கொடியேற்றி,
எங்கள் அற்புதங்களின்
கல்லறைமீதினில் பூச்சொரிந்து,
தலைசாய்த்து அஞ்சலி செய்யும்போது
புனிதப்போரில் விதையாகி
கல்லறையில் விதைக்கப்பட்ட கருக்களெல்லாம்
மலரும் அன்னை வயிற்றிலிருந்து பிறந்து
''அம்மா'' என்றே அழைக்கும் அற்புதத்தையும்
அகமகிழக் காணலாம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

நண்பன்,
**க. பாண்டியன்**
நிதித்துறை நிர்வாகப் பொறுப்பாளர்

# விடியலின் வித்து...

அன்புக்கே இலக்கணமாகி, இந்த மண்ணையும், மக்களையும் தேசியத்தலைவர் அவர்களையும் அன்பால் கொள்ளை கொண்டவன் லெப் கேணல் அம்மா / அன்பு. தேசவிடுதலையுடன் கூடிய சமூக பொருளாதார வாழ்வியல் மூலங்களும் எமது மண்ணில் துரிதகதியில் விடிவதன் ஊடாகவே எமது இனத்தின் தனித்துவம் பேணப்படும் என்ற இலட்சியப்பற்றுடன் தன்னை போராட்டத்துடன் இணைத்துக் கொண்டவன் இவன்.

எமது இயக்கத்தின் அம்மா என்ற நாமத்தைப் பெற்றவன் இவன். எமது விடுதலைப்போராட்ட அம்மா என்றும் அம்மா அண்ணன் என்றும். எமது தேசியத்தலைவர், தளபதிகள் போராளிகள் அனைவராலும் செல்லமாக அழைக்கப்படும் ஒரு துணிச்சல் மிக்க, ஒரு தனித்துவமான தளபதியாகிய இவன். எமக்கு மட்டுமன்றி இந்த மண்ணுக்கும் இந்த மக்களுக்கும் ''அம்மாவாக'' செயற்பட்டு வந்தவன்.



போர்ப்பண்பும், தீரமும், அர்ப்பணிப்பும், மனிதநேயமும் கொண்ட இவன் தனது போராட்ட வாழ்வில் முதல் பணியை யாழ் குடா நாட்டின் தென்மராட்சிப் பகுதியிலும் பின்பு குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நின்று செயற்பட்டு தேசியத் தலைவரின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டான். இதன் மூலம் பல்வேறு வகையான பொறுப்புக்களையும், பாரியளவிலான போராட்டச் சுமைகளையும் தன்னகத்தே கொண்டு செயற்பட்டவன். இக்காலப் பகுதியில் பல தாக்குதல் திட்டங்களில் சக தளபதிகள், போராளிகளுடன் சேர்ந்து செயற்பட்டு பல தாக்குதல்களை வெற்றிகரமாக செய்து முடித்தவன்.

சிங்கள அரசும் அதனது இனவாதப் போக்கும் எமது மண்ணை அழிக்க முனையும் போது அதற்கெதிராக தன்னை அர்ப்பணித்து, போராட்ட வாழ்வின் ஊடாகவே எமது வாழ்வியலை நகர்த்த முடியும் என்றும் எமது இனத்தின் எதிர்காலமும் அதனது வாழ்வும் போராடுவதன் ஊடாகவே பாதுகாக்கப்படும் என்ற சிந்தனையின் பாலும் தனது பங்களிப்பைச் செலுத்தியவன். மக்களை நேசிப்பதுடன் மக்களுக்கு நல்ல எதிர்காலத்தையும், விடிவையும் பெற்றுக்கொடுக்கவே நாம் போராடுகிறோம் என்பதை எப்போதும் வலியுறுத்துவதுடன் அதற்கான உதாரண புருசராகவும் விளங்கி மக்களுக்காகவே தன்னுயிரையே அர்ப்பணித்த இவரது போரியல் வாழ்வு புனிதமானது.

ஆரம்பகாலம் முதல் யாழ் குடாநாட்டில் சிங்கள இராணுவத்துடனும் இனவாத அரசின் அடக்கு முறைக்கு எதிராகவும் போராடுவதுடன் எமது மக்களின் பாதுகாவலனாகவும் செயற்பட்டான். சிங்களத்துடன் மட்டுமல்லாது இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்த பொழுது அந்நிய இராணுவத்திற்கு எதிராகவும் அதனது கூலிப்படைகளான தேச விரோத சக்திகளுக்கும், அடிவருடிகளுக்கும் எதிராக நின்று எமது மண்ணின் தனித்துவத்தையும் பாதுகாத்ததுடன் மக்கள் மீது தொடுக்கப்படும் கொடுமைகளில் இருந்தும், மக்களை துன்பப்படுத்தும் அனைத்து முயற்சிகளுக்கும் தனித்து நின்றும் தீரமுடன் போராடி மக்களைக் கவர்ந்தவர்.

எமது போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் தீரமுடன் செயற்பட்ட இவரது போராட்டப் பண்புகளைக் கண்ட தேசியத்

தலைவர் அவர்களால் எமது அமைப்பின் போராளிகளுக்கான பணிகளில் ஒன்றான வழங்கல் பகுதியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். எமது அமைப்பின் அனைத்து போராளிகளின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதோடு குறிப்பாக சண்டைக்களங்களில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் எதிர் கொள்ளும் உணவு, உடை, உறையுள் போன்ற அனைத்து தேவைகளும் இவனது அயராத உழைப்பினால் உடனுக்குடன் பூர்த்தி செய்யப்பட்டு சண்டைக்களங்களை எமது தளபதிகள் இலகுவாக வழி நடத்திச் செல்ல இவன் ஒரு காரண கர்த்தாவாக நின்று செயற்பட்டான்.

எதிரியால் திட்டமிட்டு ஆரம்பிக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளும் அதன்பால் உண்டாகும் இடப்பெயர்வுகளும் அவனுக்கு அவ்வப்போது ஓர் பாரியவேலைப் பளுவாக அமைந்த போதிலும் அவனது வழங்கல் பணிகளை மிகுந்த ஆர்வத்துடனும், உணர்வுடனும் செய்துமுடிக்கத் தவறவில்லை. இந்த நடவடிக்கை இவனுக்கு ஒரு பரீட்சைக் களமாக அமைந்த போதும் தேசியத் தலைவர் அவர்களின் அரவணைப்பும், ஆலோசனைகளும் இவனுக்கு இவனது செயற்பாடுகள் மிகவும் சிறப்புடனும் இலகுவாகவும் செயற்படுத்தும் பக்குவத்தை பெற்றுக் கொடுத்துள்ளன.

எமது இயக்க உறுப்பினர்கள் அனைவரையும் உண்மையாகவே உணர்வுடன் நேசிப்பவன், எல்லோரையும் சமமாகவே மதிப்பவன். எல்லோரையும் நண்பனாக, சகோதரனாக நேசிக்கும் இவனது பண்பு போற்றத்தக்கது. உண்மை, நேர்மை, தியாகம் என்பதை தனது நடைமுறை வாழ்வின் இலக்கணமாக்கி இந்த மண்ணினதும், மக்களினதும் நன்மதிப்பை பெற்றுக் கொண்ட இவனது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. இவனது கனவு நனவாகும் வரை இவன் பணி தொடர்வோம்.

**கு. விதுரன்**
துணைப் பொறுப்பாளர்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.



# தாயுமானவன்

அது ஒரு கொடிய நாள்.

தமிழீழ வரலாறு எம் கண்ணீரால் ஈரமாக்கப்பட்ட துயரம் நிறைந்த நாள்.

இனவெறியின் பலிபீடத்துக்கு இருபத்தைந்துக்கு மேற்பட்ட தமிழ் உயிர்கள் காணிக்கையாக்கப்பட்டு, புழுதியில் தூக்கி வீசப்பட்டு, எம் மண்ணை இரத்தத்தில் தோயவைத்த ஒரு கொடூரம் – நிகழ்ந்த கறுப்பு நாள் அது.

98 – யூன் - 10.

வன்னி மண்ணின் சுதந்திரபுரம், வள்ளிபுனம் ஆகிய கிராமங்களில் அன்றுதான் சிங்களப் பேரினவாதத்தின் இந்தக் கோரத் தாண்டவம் அரங்கேறியது.

காலை 9.15 மணியளவில் வான் பரப்பில் பேரிசைச்சலோடு நுழைந்த இரண்டு கிபிர் விமானங்கள் சுதந்திரபுரத்தில் அடுக்கடுக்காய் வீசிச்சென்ற குண்டுகள் கிளப்பிய புகைமண்டலத்தோடு சங்கமிக்க வந்தவைபோல - அதே விநாடியில் ஊய்ங்காரமிட்டுக் காற்றைக் கிழித்தபடி பாய்ந்து வந்தன எதிரியின் எறிகணைகள் - மூன்று முனைகளிலிருந்து!

உயிரொடுங்க, ஆன்மா கலங்க எமது மக்கள் எழுப்பிய அவலக்குரலைக் கேட்டு –

தம்மபதம் தலைகுனிந்தது.

புத்தனுடைய ஆன்மா மீண்டுமொரு தரம் தற்கொலை செய்துகொண்டது.

வாழ்வியக்கம் குலைந்து, சிதறி, இதயங்கள் புண்ணாகி எம் மக்கள் நின்றபோது அந்த ரணங்கள் மீது வீசப்பட்ட ஈட்டியாய்க் காதில் விழுந்தது அந்தச் செய்தி.

''குண்டு வீச்சுக்கு இலக்காகி அம்மாண்ணை வீரச்சாவு''

போரென்னும் நெருஞ்சிக்காட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் சக போராளிகளுக்கும், இனிய மக்களுக்கும் தன் பாசத்தினால் மலர்ப்படுக்கை போட்டு ஆற்றுப்படுத்தினானே – அன்பு என்ற புலிவீரன் – அவனா?

அவன் சொரிந்த அன்பில் சூரியனில் கூட ஈரம் கசியுமே அவனா?

புடம் போட்ட வார்த்தைகளால் எம் நெஞ்சங்களை வடம் போட்டு இழுத்துத் தன் அன்பெனும் வாசலில் அமர்த்திக் கொண்டானே – அந்த அன்பு மகனா?

விசுவாசம் நிறைந்த அந்த விடுதலைப் புலியா?

ஓ ..... எங்கள் அம்மாண்ணையா. போய்விட்டான்?

இது நாள்வரை அவனுடைய நேசத்தில் கரைந்த நெஞ்சங்கள் இப்போது சோகத்தில் கரைந்தன.

குண்டு வீச்சினால் உறவிழந்து, ஊர் பிரிந்து நடந்த மக்களுக்குத் தங்களுடைய துன்பம் இப்போது பெரிதாகப்படவில்லை.

அம்மாண்ணை போய்விட்டான் என்பதில் ஏற்பட்ட துயரம் ஒன்றே பாறாங்கல்லாய் அவர்களை அழுத்தத் தொடங்கிற்று.

அம்மாண்ணை –

புலிவீரர்களுக்கு – ஒரு தாய்

மக்களுக்கு - ஒரு பாசமிகு பிள்ளை

தமிழீழ தேசத்துக்கு - ஒரு ஒப்பற்ற விடுதலை வீரன்.

''அம்மாண்ணை'' என்ற பெயர் சொன்னால் பாலைவனம் கூடப் பூச்சொரியும். அத்தனை மென்மையான அன்புள்ளம் அவனுக்கு. அதுவே அவனுடைய தனித்துவம்.

அன்பில் விருந்து வைத்ததனாலேயே அனைத்துப் போராளிகளுக்கும் 'அம்மா' என்று அவன் ஆனான்.

ஈழத்தில் எழுந்த இனவாத நெருப்பு மூச்சுடன் எழுந்தபோது, அதை வீச்சுடன் அணைக்கும் புயலென எழுந்த புலிவீரர்களின் பட்டியலில் திருக்கேதீஸ்வரன் என்ற பெயரும் நிரந்தர இடம் தேடி அமர்ந்து கொண்டது. தமிழனுடைய இன



எழுச்சி எண்பத்தி மூன்று யூலை 23ம் நாளில் திருநெல்வேலியில் கண்ணி வெடியாய் வெடித்து உலகின் திசைகளெங்கும் போர் முழக்கம் செய்தபோது, போர்க்களம் நோக்கி நடந்த கால்களில் இவனுடைய கால்களும் உறுதியோடு நடந்தன.

ஆரவாரமில்லாத சுபாவம், அன்பை வழங்கும் இதயம். எளிமையான தோற்றம்.

இவைதான் அன்பு – அம்மாண்ணை – என்ற புலிவீரனுக்கான குறியீடுகள்.

காவலரண் கடமை செய்யும் வீரர்களுக்கு உணவு எடுத்துச் செல்லும் பணியில் ஆரம்பித்து, படிப்படியாய் இவனுடைய செயற்பாடுகள் தீவிரமடைந்தன. எந்த வேலை செய்தாலும் அதை ஒழுங்காக விசுவாசத்தோடு செய்கின்ற அருங்குணம் இவனுடையது. சிறிய படை கொண்டு எங்கள் திசையாவும் காத்த எங்கள் பெருவேங்கை கேணல் – கிட்டுவின் செயற்பாடுகளில் அம்மாண்ணையும் இணைந்து கலந்தவன்.

மிருசுவில் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது இவன் தலைமையேற்று தாக்குதல் ஒன்றினை நடத்தினான். அதில் 08ற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட இவனது அணியின் கைகளில் அவர்களது எல், எம், ஜி களும் ஏனைய ஆயுதங்களும் வந்தன. இச்சந்தர்ப்பத்திலே இவன் தனது சண்டைத்திறனை வெளிக்காட்டினான்.

அன்று முதல் இன்றுவரை எந்தப் போராளியைக் கேட்டாலும் அவன் சொல்லும் ஒரே வாசகம்:-

''அம்மாண்ணையா? பாரபட்சம் காட்டாத அன்பு அவருடையது''

இந்த உயர்குணம்தான் ஆயிரம் ஆயிரம் புலிப்போராளிகளின் அன்பைக் கவர்ந்த 'அம்மா' வாய் இருக்கும் தகுதியை இவனுக்குப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

'அன்பு' என்ற திருக்கேதீஸ்வரன்,

அனைவருக்கும் ''அம்மாண்ணை'' ஆகினான்.

அவனுக்குப் பிடித்தமான, பொருத்தமான பணிதான் அவன் வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஆம். நிதித்துறையின் வழங்கல் பிரிவின் பொறுப்பாளனாய் எங்கள் அம்மாண்ணை.

வழங்கல் பணியில் அவன் வழங்கிய சேவை, அந்தப் பிரிவையே வளமாக்கி வளரச்செய்தது என்றால் அது மிகையில்லை.

களத்தில் நிற்கும் போராளிகள், வயிற்றில் பசியோடு இருக்கக்கூடாது என்பதில் இந்தத் 'தாயுமானவன்' கொண்டிருந்த அக்கறை அலாதியானது.

திட்டமிட்ட தாக்குதல் ஒன்றுக்குப் புலிவீரர் செல்வதாக இருந்தால் - அவர்களுக்கு 'ஸ்பெஷல்' உணவு போகும். இது அம்மாண்ணையின் பணிப்பு.

குடிக்கும் நீர் கூடக் குறைவின்றிக் கிடைக்கும்படி பார்த்துக் கொள்கின்ற இந்த உயர்ந்த 'அன்பில்' கரைந்து போகின்ற ஒவ்வொரு புலிவீரனும் நன்றியோடு நினைத்துக் கொள்ளும் வார்த்தை.

''அம்மாண்ணை''.

இவ்வாறு –

ஒவ்வொரு புலிவீரனுடைய நெஞ்சக் கூட்டிலும் தனக்கென ஒரு தனியான சிம்மாசனம் அமைத்து நிரந்தரமாய் உட்கார்ந்து கொண்ட அன்பு என்ற அம்மாண்ணை,

தன் பாசத்துக்குரிய மக்களனைவருக்கும் மகனாய்த் தன்னை அடையாளம் காட்டிய இனிய பிள்ளை,

தமிழீழ அன்னையின் அடிமை விலங்குடைக்க எழுந்த மண்ணின் மைந்தன்,

வேங்கைப் பெரும் தலைவனுடைய விருப்பத்துக்கும் பாசத்துக்கும் உரிய விடுதலைப் புலிவீரன்,

அந்தக் கொடிய நாளின் பகல் பொழுதில், தான் நேசித்த மண்ணை முத்தமிட்டபடி நிரந்தரமாய் ஓய்ந்துபோனான்.

இன்னொரு சாவுக்கு அழ, இதயத்தில் கண்ணீரில்லை என்று சொல்லும்படி, தமிழீழம் முழுவதுமே அந்தப் பெருவீரன் சாவுக்கு அழுதது.



'மனிதம்' வளர்த்த அந்தத் தமிழ் வீரனுடைய இறுதி ஊர்வலப் பாதைகளெங்கும் சோகச் சுமை.

அந்தப் புலிவீரனுடைய வித்துடல் மீது தமிழீழ மக்கள் சொரிந்த பூக்கள், குவியல் குவியலாய் மலையென வளர்ந்து அவனுடைய சேவையின் பெருமையை முன்மொழிந்தன.

அந்தப் பொன்னுடல் மீது விழுந்த பூக்களின் தேன் கூடக் கண்ணீராய் மாறி அவன் பாதங்களில் காணிக்கையாயிற்று.

தங்கள் தேசமகனுடைய பாசமுகத்தைக் கடைசியாய் ஒரு தடவை தரிசித்துவிடும் சோக வெறியில் வெள்ளமென மக்கள் திரண்டிருக்க –

தாயாகி நின்ற தங்கள் வேங்கைக் குடும்பத்துத் தோழனுக்கு இறுதி மரியாதை செய்யத் துடித்தபடி ஆயிரக்கணக்கில் புலிவீரர் காத்திருக்க –

கல்லறைச் சிம்மாசனம் தேடி, அந்தப் புலிவீரனுடைய பொன்னுடல் புதைகுழிக்குள் பிரவேசித்தது.

'இன்று எங்கள் கண்ணிலே பாயும் ரத்தம் களத்திலும் பாய வேண்டும். இங்கொரு யுத்த காண்டம் எழுதியே ஆக வேண்டும்' என்று தோழர்கள் நெஞ்சம் வஞ்சினம் கூற,

'சாவரும் போதிலும் தணலிடை வேகினும் சந்ததி தூங்காது' என்று அவன் கல்லறை மீது கைகளை வைத்து அவனது பாசத்துக்குரிய மக்கள் சத்தியம் செய்ய –

அம்மாண்ணை என்ற விடுதலைப் புலி ஜோதியாய் எழுந்தான்; காற்றோடு கலந்தான்.

மரணத்திரை ஒரு விடுதலை வீரனை மறைத்துவிட முடியாது என்னும் உண்மை சொன்னானா?

தனது நேசத்தில் கரைந்த இதயங்களிடம் நெருங்கி வந்து, 'மீண்டும் இங்கே பிறப்பேன்' என்ற சேதியைக் காதோடு சொன்னானா?

**தலைமைச் செயலக போராளிகள்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

# அண்ணையின் செயல்திறன் மிக்க செல்லக் குழந்தையாம் லெப். கேணல் அன்பு / அம்மா.

நீங்கள் நிர்வாகி என்பது ஒரு புறமிருக்க
தமிழினத்தின் தலைவனை ஏனதாக்கிக்கொண்ட உங்களை
அங்கு அழைத்தவன் தான் உமக்குப் பெரியவனோ?
நன்றே நீர் பரலோகம் சென்றுவிட்டீர்
நாமிங்கு பரகதியில் உமக்குத் தெரிகிறதா ?
எம் கதி விளங்குமாயின் ஆவியாக வந்தேனும்
உம் பணி தொடரீரோ எமக்காக ...... ..

வாயால் கூறினால் செய்தே காட்டுவீர்
போராளிகள் கூறுவர் ' அம்மா அண்ணை '
வாக்குறுதி தவறமாட்டாரென
'' போய் வருகிறேன் '' என்றுதானே கூறிச் சென்றீர்கள்
ஒரு முறை வந்து காட்டுங்கள் — இனிமேலும்
உங்கள் வாக்குறுதி நிலைக்க !

நம் தாய் நாடு ஒன்றை மட்டுமே
மூச்சாக சுவாசிக்கும் எம் தலைவன்
வழி வந்த போராளிகட்கு
உள, உடல் உரமூட்டி – தினம்
எம் தேச உணர்வூட்டி
பல களம் சென்று வென்று
சுதந்திர தமிழீழம் மலர வழிகாட்டிச் சென்றீரே
மாவேங்கை அம்மாவாய் !



நீர் ஏந்திய துப்பாக்கியால்
நாளைய தமிழீழம் நமதாகிட வழி சமைத்தீரே
உம் உடல் இம் மண்ணில் இருப்பதனாலே
இனிமேலும் ஓயாது தமிழனின் வீரம் — என்றே
உம்முடலை வித்தாக்கிச் சென்றீரோ
விடுதலையை நேசித்த அம்மாவே
வீறு கொண்டெழுந்த அன்பு வேங்கையே
தமிழீழ தேசிய கீதம் பாடும் முன்பே
உம் உயிருக்கே விடுதலை கீதம்
பாடிப் பறந்தீரே
பாவியவன் படுகொலையால்
பாரை ( எம்மை ) விட்டே சென்றீரே !

அம்மா அண்ணோய் நீங்களா
எம்மை விட்டுச் சென்றது.
உலகத் தமிழ்த்தேசிய தலைவனின்
உள்ளச் சிந்தைப்படி வளர்ந்த
மென்மையாக பேசும் உங்களுக்கா
கொடூரமான இந்த மரணம் ?

மக்களால் நேசிக்கப்படும் மாவீரனே !
உங்கள் வீரமரணம் . . . .
எம் மனதை உருக்கவில்லை
இறுக்குகிறது !
அம்மா என்னும் பெயரிற்கு உள்ள
அற்புதத்தை உம்மில் காட்டிச் சென்றீரே !
அந்த அன்பு அம்மாவை எங்கே
காண்போம் அம்மா ! ...... ..... அம்மா !
அம் . . மா . . ! . . !

**காந்தா**
உங்கள் வழிபார்த்து
தலைவன் வழியில்
நிற்கும் போராளி

# இதயச் சுமை

கண்கள் உறங்குவதைக் கண்டதில்லை — அவன்
கால்கள் ஓய்ந்ததைப் பார்த்ததில்லை
தமிழுக்கு உயிர் மூச்சாய் நின்று
தமிழ்க்குலம் வாழவென்று போர் தொடுத்தவன்
தலைவனின் வழிகாட்டலில் தன்னை
தலைசிறந்த தளபதியாய் வளர்த்துக் கொண்டவன்
கடமை இவனுக்கு கண் போன்றது — இதனால்
கண்மணி போல் போராளிகளைக் காத்து நின்றவன்
எண்ணிலடங்கா துன்பங்களைச் சுமந்து நின்றவன்
தன் நலம் பாரா கடமை செய்தவன்
அம்மா அம்மா என்று அன்பால் உயர்ந்தவன்
இதயம் எல்லாம் நடுங்குகின்றது.
இடி விழுந்தது போன்று உன் இழப்பு — இங்கு
இதயங்கள் எல்லாம் அழுது கொண்டே இருக்கிறது.
பாதகனின் குண்டுஉன் உயிரை பதம் பார்த்தது; ஆனால்
உன் உறுதி குறையாத இலட்சியம்
தலை நிமிர்ந்து உறுதியுடன் செல்கிறது.
உன் அன்பை எண்ணி ஏங்குகின்றோம்.
தமிழன் உலகில் உறுதியுடன் வாழ்பவன்
தமிழ் இராச்சியம் ஈழத்தில் உருவாகும்
அப்போது உன்னுடைய பெயர் — பொன்
எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு பூசிக்கப்படும்

'' புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ''

**ஆ. நாவலன் ( தோமஸ் )**
நிதித்துறை



# அன்பு . . . அம்மா . . .

பெயருக்குப் பொருத்தமாய்
பொறுப்புடன் நீ எமக்கு
புரிந்திட்ட சேவையினை
பொங்கிவரும் துயரிடையே நன்றியுடன்
நினைக்கின்றோம்

வெங்களம் பல கண்ட
விழுப்புண் வீரன் நீ
வேங்கைப் படையினிலே
வீரத் தளபதி நீ
சிக்கல் மிகு வழங்கற் பணி
சிரமங்கள் மத்தியிலும் சிறப்பாகச் செய்தவன் நீ!

களமுனை வேங்கையாக நீ
கன காலம் இருந்ததனால்
நேர் வந்து கண்டு எம் குறை
நிவர்த்தித்து நின்றாய்.

ஒழுங்காகப் பணி செய்து எம்
உள்ளத்தில் உயர்ந்து விட்ட
அன்பு அம்மாவே !
உன் நினைவில் உறுதி பெற்று
உயர்த்துகின்றோம் கரங்களை நாம்.

**களமுனைப் போராளிகள்**

ⓘ இக் கவிதை களமுனைப் போராளிகளின் வெளியீடான ஜூன் மாத '' சுதந்திரக் காற்று ' இதழில் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

# எங்கள் அன்பு மாமாவே!

தேசத்தின் விடிவுக்காய் தேகத்தை எமக்களித்த
நேசத்தின் வடிவான எங்களன்பு மாமாவே
தேம்பி இன்று நாங்கள அழத்
தேசத்தை விட்டு எங்குதான் சென்றீர்கள்?

ஊணுறக்கம் பாராமல் உணவுடை தந்தீர்கள்
உங்கள் நலம் பாராமல் எங்களுக்காய் உழைத்தீர்கள்
பிரியமுள்ள மாமாவே பிரிந்துதான் சென்றீர்கள்
பிஞ்சுகள் நாம் என்றும் உங்களையே தேடுகின்றோம்.

சனியன்று உங்களது வரவுக்காய் காத்திருந்தோம்
சந்தடியின்றி எங்குதான் சென்றீர்கள்
பகைவனது பாதகக் குண்டு உங்களைக் கொன்றது
பாலகர் எங்களிடமிருந்து உங்களைப் பிரித்தது.

உங்களைக் கொன்ற கயவன் இங்கழிவான்
உங்களின் கனவு இங்கு நனவாகும்
உங்களின் நினைவு எங்களில் உரம் சேர்க்கும்
எங்களின் கல்வி தேசத்தை உயர வைக்கும்.

**செஞ்சோலைப் பிள்ளைகள்**



# அன்பினெம் அன்பு மாமா நீங்கள் 'அம்மா மாமா' ஆனதேனோ?

அன்பினெம் 'அன்பு' மாமா – நீங்கள்
'அம்மா' மாமா ஆனதேனோ?
கன்னத்திலே முத்தமிட்டு
கனிவுடன் அணைத்தெடுக்க
அன்புக்கரம் இன்றி அலைந்தபோது – எதிரி
இரும்புக்குழல் நீட்டி – எம்மை
இரக்கமின்றி அழித்தொழித்தான் – அவ்வேளையிலே
ஆனந்தமாயழைத்து அரவணைத்து

தேனொத்த முத்தமிட்டு பொட்டுமிட்டீர்கள்
உடை, உணவு தந்து
உறுதியற்ற உடலுக்கு உரமூட்டினீர்கள்
எம் இனிய மாமா – நீர்கள் என்றும்
எம் இதயங்களில் சனிந்திருப்பீர்கள்
அலைகள் கரைமீது மோதி நுரையாக மாறும் – மீண்டும்
நுரைகள் கடல் மேலே தாவி உல்லாசம் பாடும் – ஆனால்
நீங்கள் எமக்களித்த மலையொத்த சேவை – எம்
உடலில் இரத்த ஆறாக மாறும் – அவை
அனைத்தும் கண்ணீராய் மாறி – எம்
இதயமதில் – தாங்கா
துயராகச் சேரும்
தட்டினிலே உணவிட்டு – உண்பதற்கு
தயாரானால் – உங்கள்
நினைவு சிட்டாகப் பறந்து வந்து
சிந்தையுள் புகுந்துவிடும் – எம்
கண்முன் அவை பல அர்த்தங்கள் கூறும்
எம் இலட்சிய நோக்கை – இன்னும்
வீச்சாகச் சொல்லும்
அன்பு மாமா – நீங்கள்
அம்மா மாமா ஆனதேனோ
அன்று புண்பட்ட உள்ளத்திற்கு – ஆறுதல்
நீரை அள்ளி வார்த்தீர்கள் – ஆனால்
இன்றவை மாறும்முன்னே – அவற்றில்
வேல் பாய்ச்சிச் சென்றீர்களோ?
வேதனையைத் தந்தீர்களோ?
உங்கள் சரித்திர வாழ்வு
செப்பேட்டில் செதுக்கப்பட வேண்டியதல்ல
புதிய பொன்னேட்டிலே
புதிதாகப் பட்டை தீட்டி
புதுமெருகூட்டி, புகுத்தப்பட வேண்டியவை
உங்கள் மறைவு – எங்கள் உயர்வை
இம்மண்வாசனையோடு – விண்ணை நோக்கி
விரைவாக வளர்த்துச் செல்லும்
மலரும் ஈழமதில் – பலரும் பார்க்கும் வண்ணம்
தலைவர் மாமாவின் – தணியாத தாகத்தை
தாங்கும் தூண்களாக நின்று – இம் மண்புகழ்
பாடச் சொல்லும்.



தாங்காத துன்பத்தோடு தூங்காது
உம்மைக் காத்த வீரர்
பொங்குசேனை புயலாக நாற்புறமும் பாய
புதிய உத்வேகமதை ஊட்டிய வீரர்
களத்தில் சாத்தனாக நிற்கும் கயவர்முன்
எம்வீரமதைப் பறைசாற்றிய வீரர்
எண்ணமே ஈழம் – அதுவே
என் நெஞ்சினில் வாழும்
அண்ணனே தலைவர் – அவரே
இத்தரணியின் இணையற்றவீரர்
எனும் கருவினை நெஞ்சிலே சுமந்து
தலைவரை நேசித்த வீரருயிர்
தூசிப்படைகளினால் – இம்மண்மீது
தூசாகப் போனபோது
நீ என்னடா பார்த்தாய் என
சந்ததி கேட்டால் – நாம்
என்னபதில் சொல்வோம்?
அன்பு மாமா நீங்கள்
அம்மா மாமா ஆனதேனோ
யாதும் அறியா இப்பாலகர் மத்தியில்
பாசவலையினைப் பின்னிப் பரிதவிக்கவிட்டு
பறந்து சென்றதேனோ – இனி
பொறுக்க மாட்டோம் – பெரும்
புயலாவோம் – எதிரிப்படை
இப்பாரிலே இல்லாது ஒழிப்போம்
உங்கள் சோற்றால் ஊறிய இரத்தம்
உடலில் உள்ளவரை – உலுந்தரை
ஒரு நாளும் உருப்பட விடமாட்டோம்
ஈழம் வெல்வோம் – அதில்
புதிய சரித்திரம் படைப்போம் – என்றும்
உங்கள் கனவை நனவாக்க
அயராது உழைப்போம் – இது
நாம் தாயினும் மேலாக நேசித்த
அம்மா மாமா மேல் ஆணையிடுகின்றோம்.

**காந்தரூபன் அறிவுச்சோலைக் குடும்பத்தினர்.**

# இணையில்லா எங்களண்ணா!

வீரத்தின் உருவாக,
வேங்கையெம் மூச்சாக,
தேசத்தின் திருவாக,
திகழ்ந்த வெம் செஞ்சுடரே !
நாசத்தின் செயலினால்
நாமுன்னை இழந்ததென்ன
நாயகனே நாம் கலங்க
நமை விட்டுப் போனதென்ன?
வீரன் உனக்கிணை
வேறொருவர் இல்லையண்ணா
விடிவு தேடும் வேங்கை யெமக்கு
வழி சொன்னாய் களத்திலண்ணா
அன்னம் இட்டெங்கள்
'' அம்மா '' எனவானாய்
அன்பதனால் எமை நடத்தி
'' அன்பி '' லே உயர்வானாய்
அன்றைய களங்களும்
அண்ணாவுன் கதை கூறும்
அணி நின்ற வேங்கைகள்
அகங்களும் அதைக் கூறும்
திண்ணிய மனங் கொண்டு
திடமோடு நின்றவன் நீ
தேசத்துள் வரும் பகைக்கு
திசை மறக்க வைத்தவன் நீ
இன்றைய களங்களுக்கும்
இனியவனாம் உனைத் தெரியும்
எல்லை மீறி வரும் பகைக்கும்



இடியெனவுன் பேர் இருக்கும்.
தொல்லைகள் தாங்கி தொடரும் போரிலே
எல்லைகள் காத்து நிற்கும் எந்தவொரு வேங்கைக்கும்
ஏறிவரும் பகையில் மோதியுயிர் கொடுப்பவர்க்கும்
எங்களண்ணா உனைத் தெரியும் !
உந்தனன்பு தனைப் புரியும் !
விண்ணிடிந்து தலையில்
வீழ்ந்ததுவோ என அதிர்ந்தோம்
விழி கசிந்து நாமழுது
வீரனுன்னை தோள் சுமந்தோம்
கண்ணீருக்கும் இமையெனவே
காத்து வந்த பெரும் புயலே !
கண்ணான உமையிழந்தோம்
கலங்கியின்று உளம் வெடித்தோம்.
மீண்டு மெம் வாசலிலே
நீ வர வேண்டுமே.
மேலான அன்பினால்
எமையாள வேண்டுமே
வேண்டுகிறோம் உந்தனையே
விழி திறந்து வருவாய்
வேங்கையே நீ வந்து
வெற்றியே சேர்ப்பாய்
உந்தன் நினைவு தாங்கி
உறவு படும் துயர்க் கேங்கி
உறுதியோடு நிமிர்கிறோம் !
உற்ற பணி தொடர்கிறோம் !
ஒரு நாள் விடிவு வரும்
உந்தனெண்ணம் நிறைவு பெறும் !
இது உறுதி !

**நா. குயிலன்**
போராளி
நிதித்துறை,

## அழியாத ஓவியம் 'அம்மா'

எனது கரத்தினிலே எழுதுகோல் எடுத்து
உனது உணர்வுகளை வடிக்க முனைகையிலே
எனது உள்ளத்தில் ஓர் செய்தி
உயிர்த்துடிப்பாய் எழுந்ததண்ணா
எனது உடலில் ஓடுகின்ற குருதி
நீ தந்த உணவால் உருவானதண்ணா



கனத்த இதயத்தின் கதவு திறந்து
கவிதை எழுதுகிறேன் உனக்கண்ணா!

திருநெல்வேலியின் திருக்கேதீஸ்வரனே
தமிழர் துயர் கண்டு எழுந்தாய்
நெருப்பாய் நின்றாய்; பகை
வென்று நிமிர்ந்தாய்
அரிய தளபதியாய் பணிபுரிந்து
பெரும் களங்கள் பல கண்டாய்
குருதி கொட்ட புண்பட்டும்
பருதியாய் ஒளிதந்தாய்.

பேச்சு மாறாமற் செயலாற்றி
பேயை அழிக்க உழைத்தவனே
மூச்சு உனது நின்ற போது
முகம்வாடி எல்லோரும் கலங்கினரே
தாயே! தானைத் தளபதியே!
சேயாய் எமையெல்லாம் அரவணைத்து
உணவளித்து உடை கொடுத்து
உடலுறுதி, உளவுறுதி ஊட்டினாய்.

'அன்பு'ருவம் கொண்ட 'அம்மா'வாய்
எதிரிக்கு அஞ்சாத மறவனாய்
இரவு பகல் பாராமல்
இரகசியம் காத்து உழைத்தவனே
இன்று நீ உயிரிழந்து
வித்துடலாய் விதைகுழியில் கிடக்கின்றாய்
என்றும் நீ எம்மனதில
அழியாத ஓவியமாய் வாழுவாய்

ஆ. ந. பொற்கோ
(போராளி)
நிதித்துறை

# லெப். கேணல் அன்பு / அம்மா

இப்பெயர் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத பெயர்
இப்பெயரைக் கொண்டவர்தான் - எங்கள் மாசற்ற
பெரும் தலைவன் வளர்த்த பெரும்புலி
போராளிகளை ஆழமாக நேசிக்கத்தெரிந்தவர்
ஒவ்வொரு போராளிகளின் தேவைகளைப் புரிந்து
கொண்டு செயற்படுத்தும் அற்புத ஜீவன்
எத்துன்பம் வந்தாலும்
எவ்வகையான உணவுக் கஷ்டம் வந்தாலும்
உறங்காதிருந்து உணவு கொடுத்தவர்தான் எங்கள் அம்மா
" அம்மா " என்று சொல்லும் போது
அந்தச் சொல்லில் எத்தனை அர்த்தங்கள்
புகுந்து கொள்ளும்
அங்கிருந்தபோதே அம்மாவை பெண்ணாக



நினைத்தோம்.
இங்குவந்தே அம்மாவை, அண்ணை எனக்கண்டோம்
தெய்வீக உள்ளம் கொண்ட தாயாகப் பார்த்தோம்
போராளிகளை தன் பிள்ளைகளாக ஏற்று பேதமின்றி
வளர்த்தவர்
ஆண் போராளிகள் என்றாலும் பெண் போராளிகள்
என்றாலும் அவர்களின் தேவைகளைப் புரிந்து
கொண்டு தேவைகளை நிவர்த்தி செய்தவர்தான்
எங்கள் அம்மா.
பெண்களாகிய நாங்கள் இந்தப் போராட்டத்தில்
இணைந்து எவ்வகையான துன்பம் வந்தாலும்
மனச் சோர்வு வராமல் போரிடத் துணை நின்றார்.
மனிதச் சமுதாயத்தையே
எதிர்நோக்கும் பிரச்சனையான
உணவு, உடை, உறையுள் ஆகியவற்றையும்
தந்து எம்மை உற்சாகப் படுத்தி
தன்னைத் தெரியாதவர்களையும்
தன் செயற்பாட்டால் ஈர்த்தவர்தான் அம்மா.
களத்தில் இறங்கி நேரடியாக - எங்கள்
ஒவ்வொருவரின் தேவைகளையும்
அப்போராளிகளின் கஸ்ட உணர்வுகளையும்
தானும் அதில் கலந்து
புரிந்து கொண்டு போராளிகளைத் தேற்றிய
இவர்தான் எங்கள் அம்மா

எங்கள் புனிதப் பாதையை புரிந்து கொண்டு
எங்களைப் பிரிந்த அம்மாவுக்கு,

மட் / அம்பாறை
அன்பரசி படையணி சார்பில்
கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்

**சப்தகி**
போராளி

# அம்மா! நீங்கள் ஒரு சாகாத இலக்கியம்

அன்பே, அம்மா!
நீங்கள் மாவீரனாகிவிட்டீர்களா?
அது எப்படி நடந்திருக்கும்?
மண்ணுக்காக விதையாகிப் போனவர்களோடு
நீங்களுமா சேர்ந்து விட்டீர்கள்?
அப்படித்தான் சொல்கிறார்கள்.
அதை ஏற்கத்தான் வேண்டுமா?
நியதியும் அதுதானா?
அதை எம்மால் ஏற்கவே முடியாது.
யாரும் அதை ஏற்கவே சொல்லவும் கூடாது.
ஆம் அம்மா, நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள்.
உங்களின் ஒவ்வோர் அசைவும் எம்மோடு
ஒட்டிக்கொண்டுதானுள்ளது.
அந்தக் கூர்மையான விழிகள் குத்திட்டுப் பார்க்கின்றன.
எங்களது தேவைகளைத் தெரிந்து கொள்ளக்
கேட்பீர்களே கேள்விகள் ?
அந்த வார்த்தை இந்த அறிவுக் கூடத்தில் எதிரொலித்துக்
கொண்டே இருக்கின்றன.
அம்மா!
நீங்கள் ஒரு போராளியாக வந்தீர்கள்.
பொறுப்புகளைச் சுமந்து, தேவைகளைக் கண்டறிந்து.
பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து மேலாக உயர்ந்தீர்கள்.
உங்கள் உயர்விலே தாய்மை தெரிந்தது.
அந்தத் தாய்மையே அம்மா.



அம்மாமாரின் அரவணைப்பை விட்டுத் தாயகமண்ணைக்
காக்கக் களம் வந்த அனைத்துப் போராளிகளுக்குமே
அம்மாவானீர்கள்.
இது ஒரு நிகழ்வல்ல ஒருவரலாறு.
ஒருபோதும் சாகாத வரலாறு.
அதனாற் தான் அம்மா!
நீங்கள் என்றும் எம்மோடுநிற்பீர்கள்
விதையாகவோ வித்தாகவோ மாட்டீர்கள்
பசியைத் தீர்ப்பதிலும் பக்குவமாய்த் தேவைகளை ஈடேற்று
வதிலும் உங்கள் கரிசனை நிரப்பமுடியாத இடைவெளி தான்.
அதனாற் தான் சொல்லுகிறோம்
அம்மா நீங்கள் எம்மை விட்டு இன்னும் பிரியவில்லை.
களத்திலே விழுப்புண் பட்ட
எமக்கு வழிகாட்டினார் எம் தலைவர்
அவரது எண்ணங்களை அணுவளவும் பிசக விடாது
''ஆகட்டும் பார்க்கலாம்'' என்றீர்கள்
அனைத்தையும் இல்லையென்னாமல் தந்த அம்மா
அந்த அன்பை பிரிந்து விட்டோம் என்று எப்படிக் கூறுவது
இந்த நவம் அறிவுக்கூடத்தின் ஒவ்வொரு அசைவிலும் நீங்கள்
தானம்மா நிற்கிறீர்கள்
உமது புன்னகை முகம் எம்மீது கருணைபொழியும் கண்கள்
அந்த இதமான அன்பான பேச்சு நவம் அறிவுக் கூடத்தை
விட்டு என்றுமே அகலாது
அம்மா
நீங்கள் உயிரோடு இருந்தபோது எம் உள்ளத்தோடு
உறவாடிய அந்த உறவு புதைகுழிக்குள் உறங்கிவிடக் கூடிய
ஒன்றல்ல
அது என்றுமே சாகாத உறவு
நிலையான சரித்திரம் ஆம் ஒரு புதுக்கவிதையின் பிரசவம்
புரந்தார்கண்நீர்மல்கச் சாகிற்பின்சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து என்பது பொய்யா
மொழிப் புலவனின் நல்வாக்கு
இவ்வாக்கிற்கு இலக்கணமாகிப் பெருந் தலைவனின்
விசுவாசியாக என்றுமே சாகாத இலக்கியம் ஆகிவிட்டீர்கள்
ஆம்; தமிழன்னைக்கு ஒரு சாகாத இலக்கியம்தான் நீங்கள்
அம்மாவுக்கிணை அம்மாதான்.

**நவம் அறிவுக்கூட போராளிகள்**

# உந்தன் வாழ்வு விடுதலைப் போரில் ஒரு விழுது

திருநெல்வேலி தந்த திருக்கேதீஸ்வரனே
தவழ்ந்த மண் தனை மீட்க
தலைவன் பாசறை புகுந்த தனயனே
ஈழப்போர் அனைத்திலும்,
இந்தியப் போர்க் களத்திலும்
தமிழ்ப்புலி வீரனின்
தன்மானத்திறன் காட்டிய மறவனே
உறுதியையும் உணர்வையும்
எம்மிடம் விட்டு
உன்தோழர் வழி நாடி
தியாகசீலம் சென்றதேனோ!



போர்க்களத்தில் தளபதியாய் நின்று
தமிழன் வீரம் உரைத்தாய்
போரிடும் வீரருக்கு அம்மாவாக நின்று
உண்டி கொடுத்தாய்
புலி மறவருக்கு அன்பு அண்ணனாக நின்று
உடைகொடுத்தாய்
எதிரியின் திட்டத்தை பொடிப்பொடியாக்கி
போர்க் களத்தில் வழங்கல் பணியில்
பல சிறப்புக்கள் தந்தாய்
தலைவனின் ஆணையை தன்னகத்தே கொண்டு
தளராது நின்று தடைகள் தாண்டி பணி முடித்தாய்
போர் ஒருபுறம்,
பொருளாதார வளர்ச்சி மறுபுறம்
தமிழீழப் போரின் விழுமியத்தில்,
இது ஒரு காலம் என்ற
தலைவனின் எண்ணக்கருவுக்கு செயல் வடிவம் தந்து,
பொருண்மிய வளர்ச்சியில் புதுமைகள் கண்டாய்.
உணவுக் கலையிலும், உடைக் கலையிலும்
புதுமைகள் செய்து
போராளிகள் மனம் வேகாது உழைத்தாய்.
போராளிகள் மத்தியில்
பொறுப்புணர்வை வளர்த்தாய்.
பணியாளர்கள் மத்தியில்
பண்பையும் பரிவையும் வளர்த்தாய்
போராட்ட பாதைக்கு பல எழுகைகள் தந்த,
உந்தன் வாழ்வு விடுதலைப் போரில் ஒரு விழுது
ஊரோடி, தெருவோடி
ஊளைச்சதைக்கு உரமூட்டும் வயதில்
மக்களுக்காய் போராட வந்த புனிதனே
இளமைகள், இனிமைகள்
பந்த பாசங்களை துறந்து – மண்ணில்
புதுயுகம் காணப் புறப்பட்ட வீரனே
உந்தன் தாகம் தணியாது – இனி
இந்த மண் யாருக்கும் பணியாது,

**போராளிகள், பணியாளர்கள்**
வழங்கல்பகுதி

# லெப். கேணல் அன்பு / அம்மா அவர்களின் வீரப்பிறப்பும் வீரவரலாறும்

வீரம் விளையும் தமிழீழ மண்ணில் திருநெல்வேலி நகரிலே வைத்திலிங்கம் நாகம்மா தம்பதிகளின் ஆறாவது புதல்வனாக 1965. 09. 03 ஆம் நாளன்று அம்மா என்றழைக்கப்படும் வைத்திலிங்கம் திருக்கேதீஸ்வரன் வீரப்பிறப்பெடுத்தான். இவனை வீட்டாரும் உற்றாரும் 'ரவி' என்று செல்லமாக அழைப்பார்கள், தனது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலியில் அமைந்திருந்த பரமேஸ்வராக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் கற்றான். இவன் சிறந்த பண்பாளனாகவும் பணியாளனாகவும் விளங்கினான். கல்லூரியின் சாரணர் இயக்கமும் இவனை நெறிப்படுத்தியது. அத்துடன் இவன் ஒரு பல் தொழினுட்ப வல்லுனனாகவும் விளங்கினான்.

1986 ஆம் ஆண்டளவில் ஈழவிடுதலைப் பணிகளில் ஈடுபட்டு 1986 ஆம் ஆண்டு தனது இருபத்தோராவது வயதிலே தன்னை முழுமையாகப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டான். தமிழீழத்தில் சாவகச்சேரியில் நடைபெற்ற முதலாவது பயிற்சிப் பாசறையில் தனது போர்ப்பயிற்சியினை முடித்துக் கொண்ட இவன் அவ்வாண்டிலேயே தேசியத் தலைவரையும் சந்தித்தான்.

போராட்ட ஆரம்ப காலங்களில் நாவற்குழிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்களில் பங்காற்றியதுடன், உணவு வழங்கலிலும், போர் ஆளணி ஒழுங்குபடுத்துதலிலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டான். பின்னர் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு இடம்பெற்ற காலத்தில் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற தாக்குதல்களிலும் கலந்து கொண்டான். அக்காலப் பகுதியில் தமிழ்ச்செல்வன் அண்ணையுடன் இவனும் சக போராளிகளும் இணைந்து யாழ்ப்பாணத்தில் இருந்த எம்மக்களையும் போராளிகளையும் வன்னியில் இருந்த எமது தேசியத் தலைவருடன் இணைக்கும் தொடர்புப்பாலமாய் செயற்பட்டார்கள். இந்திய இராணுவ வெளியேற்றத்திற்கு இச் செயற்பாடுகள் ஒரு காரணமாய் அமைந்திருந்தது. இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த வேளையில் பலாலி இராணுவத் தளத்தின் முன்னணிப் போர் நிலைகளுள் ஒன்றான ''வண் வண்'' நிலையில்



நின்று சிறப்பாக பணியாற்றினான். அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்தினாவால் தீபாவளி நாளன்று தொடக்கி வைக்கப்பட்ட பலாலி இராணுவத்தின் ஆக்கிரமிப்பான ''ஒப்பரேசன் ஜெயசக்தி'' நடவடிக்கைக்கு எதிரான போரில் தீவிரமாகப் போராடி காலில் விழுப்புண் அடைந்தான். பின்னர் யாழ் மாவட்டத் துணைத்தளபதியாகவும் ஆவண ஆயுதக் காப்புப் பணிகளிலும் பொறுப்பாகச் செயற்பட்டான். அதனைத் தொடர்ந்து யாழ் மாவட்டத் தளபதியாக அம்மா விளங்கினான். அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்ட வேளையில் இவன் அதிகாரிகள் பயிற்சியும் பெற்றிருந்தான் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த காலத்தில் நடந்த பல சமர்களில் துணிச்சலுடன் பங்காற்றி வெற்றிகள் பலவற்றை விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுத் தந்தான். பலாலி கிழக்குப் புறமான காவலரண்கள் மீதான தாக்குதலில் சிறப்பாக பங்காற்றி கையில் விழுப்புண் அடைந்தான் இத்தாக்குதலில் தனது உற்ற நண்பர்களான மேஜர் டொச்சனையும் கப்டன் வீமனையும் சக போராளிகள் சிலரையும் இழந்தான்

1994 ஆம் ஆண்டில் வழங்கல் பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான். வன்னி மண்ணிலும் குறிப்பாக முல்லைப் படைத்தள வெற்றி தொடக்கம் ஜயசிக்குறாய் (ஜெயசிக்குறாய்,) ஓராண்டு வெற்றி விழா நாளிற்கும் மேலாக வழங்கல் பணி இவனால் திறமையாக மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கைக்கு வழங்கல் பகுதி போராளிகளும் பணியாளர்களும் தமது கடின உழைப்பினை வழங்கியிருந்தனர். இதற்கான பாராட்டினை தமிழீழத் தேசியத் தலைவரிடமிருந்து பெற்றிருந்தான் அதுமட்டுமன்றி தலைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இறுதி வரை செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது இதயத்தின் ஒரு மூலையில் தன்னை நேசித்தவருக்கு இடம் கொடுத்திருந்த அம்மா என்ற பெரு வீரனின் இறுதிவீர வரலாற்று வரிகள் அவனது உதிரத்தால் வழங்கலின் மையத்தில் 1998 06. 10 ஆம் நாளன்று எழுதப்பட்டது

**வே, கடலரசன்**
(போராளி)
நிதித்துறை

# அம்மா உன் பணி தொடர்வோம்

உன்னத தலைவனின் வழிநடத்தலிலே
அதிர்ந்தெழுந்த போர் முரசத்தில்
விழித்தெழுந்த வீரத் திலகனே
கொதித்தெழுந்த கரிகாலன் படைதனிலே
ஆர்ப்பரித்து வெகுண்டெழுந்த
வேங்கைகள் வரிசையிலே — உன்
பாதச் சுவடுகளையும்
பதிய வைத்தவனே - அம்மா

உன் இலட்சியப் பயணத்திலே
அரிய பல சாதனைகளைப் படைத்துவிட்டாய்
'அம்மா'என்ற பெயருனக்கு
எத்தனை பொருத்தம் பார்
அன்பு என்ற பெயருக்கும்
இலக்கணம் கொடுத்தாயே

உனது சொந்த மண்ணிலே
உரிமைக்காக குரல் கொடுத்து
உரமாக்கிப்போன எம் - அம்மாவே
உன்னை என்றும் மறவோம்

விடுதலைப் புலியாகி வீணரை வீழ்த்திட
உறுதி கொண்டு நின்றவனே - எம்
இலட்சியமாகிய தமிழீழம் விடிய
உயிர் கொடுத்த காவியமே நாம்
உன் தியாகத்தால் உறுதி கொள்கிறோம்

நீ புரிந்த பணி
எம் தேச விடிவுக்கானது
ஓய்வு உறக்கமின்றி
இரவு பகல் பாராது – உன்
கடனை தொடர்ந்தீர்
அந்தக் கணப் பொழுது
அகிலமே கலங்கிட
அரக்கனின் கொடுவினையால்
அம்மா என்ற அகல் விளக்கு
அமைதியாய் உறங்கியது.

அம்மா என்ற மறத்தமிழ் புலியே
அடிமைத்தளை உடைக்க
அணி அணியாய் புலியாகும்.
அரக்கர் சேனைகள் ஒழியும்
அமைதியுடன் தூங்குங்கள்
அம்மாவே தேசம் விடியும்
தமிழினம் தலைநிமிர்ந்திடும்.

இனி எங்கள் பகை மேகம் கலையும்
இனிதான ஒரு வாழ்வு உருவாகும்
புலிப்படை எம் தேசம் மீட்கும்
புலிக் கொடிகளாய் எழுந்து இங்கு ஆடும்.

விளக்கேற்றி
மலர் தூவுவோம்
மரணித்த எம அம்மாவின்
பணி தொடர - நாம்
விரைவோம் இது உறுதி

**வழங்கல் பகுதி உறுப்பினர்கள்**
திரித்துறை

# அன்னை உன்னை யாரழித்தார்?

அந்தப் பாவியவன்
செய்த நாசமென்ன ?
ஈழமதைப் பாசமுடன்
நேசித்த தேசப் புதல்வனை
பாதி வழியில் பறித்ததேனோ ?
கொடும் காலனவன்
செய்த கொடுமையென்ன ?
நெஞ்சமது பொறுக்க வில்லை.
உள்ளமது ஆறவில்லை
கொடும் பகையை
அழிக்க வந்த
புதல்வனவன் எம்
போராட்ட வரலாற்றில்
எமக்கெல்லாம் அன்னையவன் — நம்
தமிழீழத்தின் செல்வமவன்.

அவனை யாரழித்தார் ?
தாயகத்தைக் காதலித்து
தமிழர்களை நேசித்து — இன்று
எமை அழிக்க வந்த
சிங்களத்தை அழிக்க வென
வந்த புயலை யார் மறித்தார் ;
நேற்று வரை எம்மோடு
வாழ்ந்த சோதரனை
யாரழித்தார் ?

கொடும் பகையே ! — எமக்கு
வரும் சினத்தால் நீ
அழிந்து போவாய் !
தேசமிங்கு அழுகுதண்ணா !
உன் பாச மக்கள்
மனங்களிங்கு கதறுதண்ணா
தேச மதின் வேந்தனுக்கு
வலது கரமாய்
இருந்தவனே ! — உன்
இழப்பை ஏற்பதற்கு
அவர் என்ன செய்வார் ?
எது செய்வார் ?



எமக்காக உன்
பசி மறந்து
இரவெல்லாம்
கண் விழித்து
பகல் இரவு எதுவுமின்றி
அயராது உழைத்தவனே !
உன் பிரிவை எங்களாலே
நம்பவும் தான் முடியுதில்லை ?

பசிக்க விட மாட்டாய்,
எமைக் கலங்க அனுமதிக்காய்,
எந்தக் களங்களிலும் — உன்
வரவை நாங்களங்கு
எதிர் பார்ப்போம்
வந்து நிற்பாய் !
வாகனத்தில் எமக்காக
உணவுகள் பல வந்திருக்கும்.

இயக்கமதின் அன்னை நீ
அம்மாண்ணா . . . அம்மாண்ணா . . என்று
இங்கு அழுகுரல்கள்
கேட்குதண்ணா !
கடலலைகள் ஆர்ப்பரித்து
வருகுதண்ணா ?
மேகமிங்கு சோகமாக
உனையிங்கே தேடுதண்ணா !

ஈழத்தின் தலைவனிவன்
பிரபாகரனின் பெருவிருப்பில்
வளர்ந்து வரும் குழந்தைகள்
உனக்கு இரு கண்களண்ணா!
என்ன குறை எமக்கு விட்டாய்?
தலை விரித்தாடுகின்ற
நிதி நெருக்கடிக்கு மத்தியிலும்
அவர்க்கு நீ – என்ன குறை விட்டுவிட்டாய்
உன் மனம் வாடும்,
உனக்கெதுவும் வேண்டாமென்று
குறை விட்டு விட்டாய்?
இல்லையென்று சொன்னாலும்

அவற்றையெல்லாம்
எமக்களிப்பாய்.

உண்ணுகின்ற உணவு – எமக்கே
உள்ளே இறங்குதில்லை
உணவு தந்த உயிரே
உன் உயிரை யார் பறித்தார்?
நீ எமக்குத் தந்த எல்லாமே – உன்
பெயர் சொல்லிக் கதறுதண்ணா!

நீ நடந்த பாதையெங்கும்
சோக இசை கேட்குதண்ணா!
உன் பாச மக்களுடன்
அம்மா என்றழைக்கும் – உன்
உடன் பிறப்புக்களை,
இங்கே பார்!
யார் கண்ணில் நீரில்லை?
எவர் மனமிங்கு
நோகவில்லை?

நேற்றுவரை எம்மோடு
வாழ்ந்திருந்தாய்,
இன்றுன்னை ...
எம்மை விட்டு
யார் பிரித்தார்?

வேங்கையின்னும் பாயுமண்ணா!
வேங்கையின்னும் பாயுமண்ணா!
போர் இன்னும் ஓயவில்லை,
புலிகள் இன்னும் சோரவில்லை,
கொடும் பகை மேல்
வேங்கையின்னும் பாயுமண்ணா!
அண்ணன்
கரிகாலனவன் காலத்தில்
தமிழீழமது மலருமண்ணா!

**தமிழினி**
**செஞ்சோலை**



# லெப். கேணல் அன்பு / அம்மா நினைவாக . . .

மாமாவே மாமாவே
மரணித்தா போய் விட்டாய்
மருமக்கள் நாம் இங்கே
மனம் தளர்ந்து போய் விட்டோம்

( மாமா )

புலி மாமா என்று அழைத்தோம்
புகழ் உடனே வாழ்ந்திட்டோம்
புவிதனை மீட்காமல்
புகுந்திட்டாய் சாவினிலே

( மாமா )

புத்தம் புதிய யுகம்
புலர்கின்ற வேளையிலே
புல்லர்கள் ' புல்லட் ' பட்டு
புதை குழியில் ஆனாயே

( மாமா )

அத்தை வருவா வென்று
அம்மம்மா கூறும் பலகதைகள் -- எம்
ஆசைக் கனவுகளை பாவி
அடியோடு அழித்தானே !

( மாமா )

பருந்து வந்திங்கே
எம் குஞ்சை பறித்ததுவோ !
பாசறை வீரர் இங்கே
பார் புகழப் போராட்டம் – மாமாவே
பார் மீட்கப் புறப்பட்டு
பாசறையில் சேர்ந்திட்டு
தமிழராய் வாழ்ந்திடுவோம்
தமிழ் ஈழம் பெற்றிடுவோம்.

அன்புடன்
**மருமக்கள்**

# லெப். கேணல் அன்பு / அம்மா நினைவாக...

ரவி என்று நாம் அழைக்க
திருக்கேதீஸ் என்று அயல் அழைக்க
அண்ணை 'அன்பு' என்று பெயர் சூட்ட
உணவு பகிர்ந்து 'அம்மா' ஆனாய்

தமிழ் உணர்வில் - மாவீரா
போர் தொடுத்தாய்
தலைவன் சேனையில் நெறிநின்றாய்
பாசறையில் நீ புகுந்தாய்
பல வழிகளில் நீ உழைத்தாய் – ஈற்றில்
பரிமாற்றம் உனதானாய்

எதிரி களம் பல கண்டாய்
எதிர் கொண்டு வெற்றி கண்டாய்
போராளி மனதினிலே
புலிவீரா ! நீ வாழ்வாய்

பாதகர்கள் உனைத் தேடி
பல தடவை அம்பிட்டார் – மறவா
எதிர் பாராமல் உன் உயிரை
கொடியவர்கள் அழித்து விட்டார்

சத்தியத்தின் சோதனையில்
சரித்திரமாய் ஆனவனே
சாவு அழிவதில்லை நீ உறங்கு
நிம்மதியாய் நீ உறங்கு
உன் வாழ்வின் வரலாறு
உன்னதமாய் ஆனது போல்
தமிழ் இனத்தின் விடுதலையும்
தலை நிமிரும்
உன் சாவும் அதில் வாழும்

அன்புடன்
சகோதரர்கள்



# புலிவீரர் சேனைக்கே அம்மாவானாய்

தானைத் தலைவன்
வழிகாட்டலை
தன்னகத்தே கொண்டு
கரிகாலன் சேனைக்கே
தேவையெதுவெனக்
கேட்டு வழங்கி
போரிடும் புலிவீரர் சேனைக்கே
அம்மாவானாய்
உன் வீரச்சாவு
எம் இதயமதை வாட்டிடினும்
உன் பிரிவை
ஏற்படுத்திய
வீணர்களை
அழித்திடுவோம்
என உறுதி பூண்டு
உன்னை நினைவு கூருகிறோம்

சேகர்
ஊர்திப் பேணுகைப் பகுதி
நிதித்துறை

# தாயன்பு கொண்ட தளபதி

அன்பு, கருணை, கண்டிப்பு போன்ற தாய்மைப் பண்புகள் அவரிடம் காணப்பட்ட படியால் தான் எல்லோரும் அவரை 'அம்மா' என அழைத்தனர். எமது போராட்ட வரலாற்றில் ஆழமாக தன்தடத்தை பதித்துச் சென்ற தளபதிகளில் அம்மாண்ணையும் முக்கியமானவர். ஒவ்வொரு போராளியையும் தன் தம்பியாய், தங்கையாய் நேசித்து அன்பு செலுத்தி அவர்களின் பிரச்சனைகளை மிக ஆழமாகப் புரிந்து கொண்டு உண்மையில் அம்மாண்ணைக்கு அன்பு, அம்மா என்ற பெயர்கள் மிகவும் பொருத்தமானவை.

1991ம் ஆண்டு காலப்பகுதியில் பலாலிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது பொசிசன் பங்கருக்குக் கிட்ட வந்து சாப்பிட்டீர்களா? ரீ குடித்தீர்களா? எனக் கேட்காமல் போக மாட்டார். அதிலும் பெண் போராளிகளின் தனிப்பட்ட சில பிரச்சனைகளையும் சரியாக விளங்கிக் கொண்டு ஒரு தாயைப் போல உதவி செய்வதும், பொறுப்போடு ஆலோசனை கூறுவதும் அம்மாண்ணையின் தனிப்பண்புகள்.

இவர் தனது பொறுப்பின் நெருக்கடிகளை சமாளிக்க சில வேளைகளில் இறுக்கமான பதில்களையும் சொல்வதுண்டு. இருப்பினும் சில தேவைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து



கொண்டு மனதால் வருத்தப்பட்டு விட்டு தரலாம் எனக்கூறி விடுவார். சில வேளைகளில் வழங்கல் தொடர்பாக அம்மாண்ணையை சந்திப்பதென்றால் கூடவே ஒரு பயமும் ஏற்படும் எமது தேவைகள் விளங்கினாலும் அந்தப் பொருள் அவர்களிடம் இருக்குமா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக எடுத்ததும் இல்லை என்று கூறிவிடுவார்

''என்ன அம்மாண்ணை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள்தானே அண்ணை தர வேணும்'' என்று கூறினால் பாசமும் கவலையும் நிறைந்த மெல்லிய சிரிப்புடன் தரலாம் என்பார் தரலாம் என்றால் அது எப்படியாவது எமக்குக் கிடைத்தே தீரும்.

கண்ணைக்குத்தும் கலரில் டவலும், சரமும், உடுப்புகளும் தரும்போது பெண் போராளிகள் '' அது எங்கட அம்மாண்ணை தன்ர பிள்ளையள் வடிவாத்திரியட்டும் எண்டு கலர் கலரா உடுப்பு தந்தவர்'' என்று பகிடியாகவும், உரிமையோடும் கூறிச் சிரித்துக் கொள்வார்கள். எப்படித்தான் அம்மாண்ணை இந்த வேலையைச் சமாளிக்கிறாரோ? இயக்கத்தின் இவ்வளவு நிதி நெருக்கடிக்குள்ளேயும் எங்களுக்கு என்ன தராமல் விட்டவர், பாவம் என ஆதங்கப்பட்டுக் கொள்வார்கள். சாதாரண போராளி தொடக்கம் தளபதி வரை அம்மாண்ணையைத் தெரியாத, அவரைபற்றிக் கதைக்காத, அவர் இழப்பால் விழியோரம் கசியாத எவருமே இல்லை.

எங்களுக்கு அம்மா போல பரிவு காட்டியவர். எதிரிக்கு நெருப்பாகவும் பலகளம் கண்டவர் பல போராளிகளை உறுதியான போராளிகளாக உருவாக்கி விட்டவர். எங்கள் தலைவரின் பளுவை தானும் சுமந்தவர். அண்ணனுக்கு நல்ல தம்பியாக எங்களுக்கு அன்பு அண்ணாவாக வாழ்ந்து எம் நெஞ்சங்களில் நீங்காத நினைவாகி விட்டவர். அம்மாண்ணையின் இலட்சியத்தை எம் நெஞ்சினில் சுமந்து கொண்டு எம் பயணம் விடிவை நோக்கித் தொடர்கிறது.

இப்படிக்கு
**தாரணி**
(அ. து. மகளிர்)

# மீண்டும் ஈழமதில் புலியாய் பிறவாயோ (வா)

திருநெல்வேலி பெற்றெடுத்த முத்தே
திருக்கேதீஸ்வரன் எனும் திருவிளக்கே
எண்பத்தாறுதனில்,
புலிப்பாசறைக்குள் புகுந்தவனே
ஆக்கிப் போட்டதனால் அங்கு 'அம்மா' ஆனாய்
அதுதான் உனக்கு வேங்கைப் பெயராம்
தாய்வீடு தனை மறந்தாய்
தமிழீழமதை தாயாக நீ கொண்டாய்
உன் அன்பு தந்தையை மறந்தாய்
உன் தலைவனைத் தந்தையாய் கொண்டாய்
உன் உடன் பிறந்தவரை மறந்தாய்
உன் இனிய தோழர்களை உடன்பிறப்பாய் கொண்டாய்
தமிழீழ தேசமதில் – நீ
எத்தனை எத்தனை சாதனை படைத்தாய்
தென்மராட்சி தெருவெல்லாம் – இன்று



உன் வீரத் திருப்புகழ் பாடுதடா
இந்தியப் படையுடன் இறுதிவரை போரிட்டாய்
யாழ்தேவியை தடுத்து நிறுத்தினாய்
வலிகாமத்திலே காலிலே வெடி சுமந்தாய்
வரணியிலே வயிற்றிலே குண்டுபட்டும்
வெற்றியுடன் வந்தபகை நீ முடித்தாய்
இப்படி எத்தனை வீரத்தழும்புகள்
அண்ணனின் அன்புப்பிள்ளையானாய்
''அன்பு'' என்னும் அழகான பேரும்கொண்டாய்
யாழ் மாவட்ட தளபதியாய்
தவளைப் பாய்ச்சல் களமும் கண்டாய் – நீ
வழங்கல் பகுதியின் பொறுப்பினை ஏற்று
வழங்கல் பணியினில் சாதனை படைத்தாய்
''ஜெயசுக்குறுவின்'' ஓராண்டு நினைவில்
உன் தலைவன் வாயாரப் புகழ்ந்தான்
சண்டை இல்லையடா நீ இருந்த வீட்டில்
சண்டாளன் வந்து போட்டானே குண்டு.
எங்கள் பிள்ளையைப் பறித்தானே இன்று
வீரப்புலியடா நீ!
குண்டுபோட்ட வேளையிலும்
புலியே நீ குனியவில்லையடா
நெஞ்சினிலே குண்டேந்தி
வீரசொர்க்கம் அடைந்தாயே – ரவி
நீ ஓடி வாராயோ – வந்து
ஒரு வார்த்தை பேசாயோ
உன்னவளின் கண்ணீரை
உன்கையால் துடைக்காயோ
கலியாணத் தேதிசொன்னார்
காத்திருந்தோம் அந்நாளை
வேங்கைதான் பெண் என்றார்
கற்பனையில் திகழ்ந்திருந்தோம்
உன் மணநாளைப் பார்த்திருந்தோம்
நாம் மாலையிட காத்திருந்தோம்
தந்தி பறந்ததடா
தம்பி கலியாணமென்று
முந்தி விட்டதடா
மோசமான செய்தியொன்று!
இடிந்து தான் போனாரடா

இந்த செய்திதனை கேட்டு அங்கு!
எல்லாமே நீ என்றாள்
ஏனவளை விட்டுச் சென்றாய்
மாலையிட வைத்தாய் - நீ
மாவீரனாய் மாலையிட வைத்தாய்
பன்னீர் தெளிக்க வைத்தாய்
அது கண்ணீராய் மாறியதேன்!
அறுகரிசி, போடவைத்தாய்
அது பிடி மண்ணாய் மாறியதேன்!
உன்னவளும் அழுகின்றாள்
உன் பெற்றோரும் அழுகின்றார்
உற்றாரும் அழுகின்றார்
உன் உடன்பிறந்தோர் அழுகின்றார்
உன் பிள்ளைகளும் அழுகின்றார்
உன் உடன் இருந்தோர் அழுகின்றார்
எல்லோரும் அழுகின்றார் - எங்கள் அம்மா
நீ இங்கில்லையென்று
என் உயிரே நீ எழுந்து வந்து பாராயோ
எங்கள் ஈழம் படுந்துயரமதைப் பாராயோ
பத்துமாதம் சுமந்து பெற்றவளைப் பாராயோ
தோளினிலே உன்னை சுமந்த ஐயாவைப் பாராயோ
உன்னவளை ஒரு தரம் ஓடிவந்து பாராயோ
உன் அன்பு அக்காமாரை ஒரு கணம் நீ பாராயோ
உன் உடன்பிறந்த அண்ணனை நீ பாராயோ
உன் பாசமுள்ள தம்பியை ஒருதரம் பாராயோ
பாலகராம் மருமக்கள் படும்துயரம் பாராயோ
மைத்துனரைப் பாராயோ உன் மைத்துனியைப்பாராயோ
மண்மீட்கப் போராடும் பிள்ளைகளைப் பாராயோ
உன்இனிய தோழர்கள் ஓடிவந்து பாராயோ
உற்றாரை, உறவினரை கணப்பொழுது பாராயோ
பாசமுள்ள உன் மக்கள் படும்துயரம் பாராயோ
தேசியத்தலைவரை தேடிவந்து பாராயோ
எம் இனிய தேசமதை எழுந்துவந்து பாராயோ
புயலெனப் பாய மீண்டும் புலியாய் பிறவாயோ
மீண்டும் ஈழமதில் புலியாய்ப் பிறவாயோ

என்றும்

**உன் உதயண்ணை**

# நன்றியோடு சில வார்த்தைகள்....

10. 06. 1998 அன்று சுதந்திரபுரம் - வள்ளிபுனம் கிராமங்களின் மீது ஸ்ரீ லங்காப் படைகளால் மேற் கொள்ளப்பட்ட குண்டு வீச்சு, எறிகணைத்தாக்குதல் களால் லெப் கேணல் அன்பு / அம்மாவுடன் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளுக்கும் அந்தக் கிராமங்களில் சாவடைந்த பொதுமக்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்எங்கள் அஞ்சலியைச் தெரிவித்துக் கொள் கின்றோம்.

அத்துடன் அன்பு / அம்மாவின் வீரச்சாவு அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்ட போராளிகள், பொது மக்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எங்களோடு பலவகையிலும் துயர்பகிர்ந்தோர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

- குடும்பத்தினர்

த. முகவரி
இல ; 435 / 6 யூனிற்
இராமநாதபுரம்

நி. முகவரி
சபாரட்ணம் லொஷ்
பலாலி றோட்
திருநெல்வேலி